# பஸ்கா





பாடம் 5 ஆகஸ்ட் 2, 2025



"அப்பொழுது உங்கள் பிள்ளைகள்: இந்த ஆராதனையின் கருத்து என்ன என்று உங்களைக் கேட்டால், இது கர்த்தருடைய பஸ்காவாகிய பலி; அவர் எகிப்தியரை அதம்பண்ணி, நம்முடைய வீடுகளைத் தப்பப்பண்ணினபோது, எகிப்திலிருந்த இஸ்ரவேல் புத்திரருடைய வீடுகளைக் கடந்துபோனார் என்று நீங்கள் சொல்லவேண்டும் என்றான். அப்பொழுது ஜனங்கள் தலைவணங்கிப் பணிந்துகொண்டார்கள்."

யாத்திராகமம் 12:26, 27

தேவனுடைய கட்டளைகளை பின்பற்ற மறுத்த எகிப்தில் உள்ள ஒவ்வொரு குடும்பத்தையும் பத்தாவது வாதை தாக்கியது. அது திடீரென்று வரவில்லை, ஆனால் பல நாட்களுக்கு முன்பே அறிவிக்கப்பட்டது.

உண்மையில் அது விசுவாசத்தின் ஒரு சோதனை. அந்த இரவில் யாரும் இறக்க வேண்டிய அவசியமில்லை. ஒவ்வொருவருக்கும் தங்கள் முதல் குழந்தையின் உயிரை காப்பாற்ற வாய்ப்பு கிடைத்தது.

ஆட்டுக்குட்டியானவர் மாத்திரமே கண்டனம் செய்யப்பட்டார். அவர் மட்டுமே மரிக்க வேண்டும். அவரது இரத்தம் மட்டுமே சங்கார தூதனை கடந்து செல்ல செய்யும். ஏன்? ஏனென்றால் கிறிஸ்து மட்டுமே இரட்சிக்கிறார். மேலும் இது தலைமுறை தலைமுறையாக நினைவுகூரப்பட வேண்டும்... அவர் வரும் வரை.






- எச்சரிக்கை (யாத்திராகமம் 11)
- ஆயத்தம் (யாத்திராகமம் 12:1-16)
- இரத்தமும் மதுவமும் (யாத்திராகமம் 12:17-23)
- நினைவுகூர்ந்து போதிக்க வேண்டும் (யாத் 12:24-28)
- பத்தாவது வாதை (யாத் 12:29-30)

# எச்சரிக்கை

“அப்பொழுது கர்த்தர் மோசேயை நோக்கி: இன்னும் ஒரு வாதையைப் பார்வோன்மேலும் எகிப்தின்மேலும் வரப்பண்ணுவேன்; அதற்குப்பின் அவன் உங்களை இவ்விடத்திலிருந்து போகவிடுவான்; சமூலமாய் உங்களைப் போகவிடுவதும் அல்லாமல், உங்களை இவ்விடத்திலிருந்து துரத்தியும் விடுவான்.” (யாத்திராகமம் 11:1)



மூன்று நாட்கள் இருட்டிற்கு பிறகு, பார்வோன் மோசே மீது கோபமடைந்து, அரண்மனைக்கு வருவதை தடுத்தான்(யாத். 10:28).

ஆனால் மோசே இந்த கட்டளைக்கு கீழ்படிய முடியவில்லை, ஏனென்றால் பார்வோனின் முதல் மகனின் உயிர் ஆபத்தில் இருந்தது. பார்வோனின் “கடவுளாக” (யாத். 7:1) மோசே, பார்வோன் என்ன செய்ய வேண்டும் என்பதை எச்சரிக்க வேண்டியிருந்தது (ஆமோஸ் 3:7).

தெய்வீக நியாயத்தீர்ப்பு நேரம் வந்துவிட்டது (யாத். 12:12):



பெருமை, திமீர் பிடித்தவர் மற்றும் சுரண்டல் செய்பவர்களுக்கு: தண்டனை, மற்றும் மிரட்டி பணம் பறிக்கப்படுவதை திருப்பி தரவேண்டிய கடமை (யாத். 11:4-5, 2)

தேவனுடைய கட்டளைகளுக்கு கீழ்படிந்தவர்களாக: தண்டனையை கடந்து வரும்படியும், விடுதலையடையும் படியாகவும் (யாத் . 11:7-8)





இப்போது மோசேதான் கோபத்துடன் பார்வோனின் பிரசன்னத்தை விட்டு வெளியேறினார். பார்வோனின் பிடிவாதத்தையும் அவரது முடிவின் விளைவுகளையும் கண்டு கோபமடைந்தார். மோசேயை மதித்த போதிலும், பல எகிப்தியர்கள் எச்சரிக்கையை கவனிக்க மறந்துவிட்டனர் (யாத். 11:3).

# ஆயத்தம்

"நீங்கள் இஸ்ரவேல் சபையார் யாவரையும் நோக்கி: இந்த மாதம் பத்தாம் தேதியில் வீட்டுத்தலைவர்கள், வீட்டுக்கு ஒரு ஆட்டுக்குட்டியாக, ஒவ்வொருவரும் ஒவ்வொரு ஆட்டுக்குட்டியைத் தெரிந்து கொள்ளக்கடவர்கள்." (யாத் 12:3)

சங்கார தூதன் "கடந்து செல்லவும்" (பெசாக், பஸ்கா), முதற்பேறானவர்கள் இறக்காமல் இருக்க அவர்கள் என்ன செய்ய வேண்டும் என்பதையும் என்பதையும் தேவன் விரிவாக விளக்கினார்:



தம்முடைய மக்கள் தம்மை வணங்கவும், தம்முடைய கிருபையை அவர்கள் புரிந்துகொள்ளவும் தேவன் அவர்களை ஆயத்தப்படுத்தினார் (யாத். 12:27பி).





10ஆம் தேதி ஒவ்வொரு குடும்பத்திற்கும் அல்லது பல குடும்பங்களுக்கும் குறைபாடற்ற ஒரு ஆட்டுக்குட்டியை ஒதுக்கி வைக்கவேண்டும் (யாத். 12:3-5).



14ஆம் தேதி, அந்தி வேளையில், அவர்கள் அதை பலியிட வேண்டும் (யாத். 12:6)



அவர்கள் தங்கள் கதவு நிலைகளையும் கதவு நிலைகளின் மேற்சட்டத்தையும், அதின் இரத்தத்தால் அபிஷேகம் செய்ய வேண்டும் (யாத். 12:7)



அவர்கள் இறைச்சியை முழுவதுமாக வறுத்து, புளிப்பில்லாத அப்பம் மற்றும் கசப்பான மூலிகைகளுடன் புசிக்க வேண்டும் (யாத். 12:8-10)



அவர்கள் அதை அவசரமாக சாப்பிடும்போது, அவர்கள் உடை அணிந்து செல்ல தயாராக இருக்க வேண்டும் (யாத். 12:11)



அவர்கள் எகிப்தை விட்டு வெளியேறிய போது, ஏழு நாட்கள் புளிப்பில்லாத அப்பத்தை தொடர்ந்து சாப்பிடவேண்டியிருந்தது (யாத். 12:15)

# இரத்தமும் மதுவமும்

"அப்பொழுது மோசே இஸ்ரவேல் மூப்பர் யாவரையும் அழைப்பித்து: நீங்கள் உங்கள் குடும்பங்களுக்குத் தக்கதாக உங்களுக்கு ஆட்டுக்குட்டியைத் தெரிந்தெடுத்துக்கொண்டு, பஸ்காவை அடித்து, (யாத் 12:21)

14ஆம் தேதி, விழாவில் இரண்டு கூறுகள் முக்கிய பங்கு வகித்தன: இரத்தம் மற்றும் மதுவம்.

அவர்கள் தங்கள் வீடுகளிலிருந்து மதுவத்தை அகற்றி, அது இல்லாமல் ரொட்டியை சுட வேண்டும் (புளிப்பில்லாத அப்பம்). அவர்கள் உடனடியாக புறப்பட வேண்டியதிருந்ததால், அந்த ஆரம்ப காலங்களில் அவர்களிடத்தில் மதுவம் இருந்திருக்காது(யாத். 12:17–20). இந்த மதுவம் பாவத்தின் சின்னம், புளிப்பில்லாத அப்பம் கிறிஸ்து இயேசுவில் புதிய வாழ்க்கையை குறிக்கிறது (1 கொரி. 5:6–8; 2 கொரி. 5:17).





இரத்தம் என்பது இரட்சிப்புக்குறிய மூலப்பொருளாக இருந்தது. அது இயேசுவின் இரத்தத்தை குறிக்கிறது—அதை அவர் சிலுவையில் சிந்தினார்—இதனால், நியாயத்தீர்ப்பில், தேவன் நம் கண்டனத்தை கடந்து செல்வார்(1 யோவான் 1:7 ; 2:1-2).





இரத்தம் தெளிக்கப்பட வேண்டிய ஈசோப்பு (யாத். 12:22) பாவம் சுத்திகரிக்கப்படுவதற்க்கான அடையாளமாகும் (சங். 51:7).

# நினைவுகூர்ந்து போதிக்க வேண்டும்

"இந்தக் காரியத்தை உங்களுக்கும் உங்கள் பிள்ளைகளுக்கும் நித்திய நியமமாகக் கைக்கொள்ளக்கடவீர்கள்." (யாத்திராகமம் 12:24)

எகிப்திலிருந்து அவர்களை வெளியே கொண்டு வருவதற்கு முன்பே, தேவன் எபிரேய குடும்பங்களுக்கு ஒவ்வொரு ஆண்டும் தங்கள் குழந்தைகளுக்கு சொல்லி கொடுப்பதன் மூலம் தங்கள் வரலாற்றை பாதுகாக்க கற்று கொடுத்தார் (யாத். 12:24-27). அப்போதிலிருந்து, பஸ்கா பண்டிகை ஒரு குடும்ப கொண்டாட்டமாக இருக்கும். பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளுக்கு தேவனைப் பற்றிய அறிவில் நடத்துவதற்கான வாய்ப்பாக இருக்கும். விடுதலையின் கதையை விரிவாகவும், முதல் நபராகவும் விளக்க வேண்டியிருந்தது (உபா . 26:5-9).





இது நமக்கு மிகவும் சிறப்பான பாடத்தை கொண்டுள்ளது. நம் நம்பிக்கையை நம் குழந்தைகளுக்கும் கொடுக்க வேண்டும். வரலாற்றில் மட்டுமல்ல, நம் சொந்த வாழ்க்கையிலும் தேவன் என்ன செய்திருக்கிறார் என்பதைப் பற்றி நாம் அவர்களுக்கு சொல்ல வேண்டும். நாம் அவர்களுக்கு முன்பாக தேவனை வணங்கி வழிபட வேண்டும் (யாத். 12:27).

# பத்தாவது வாதை

"நடுராத்திரியிலே சிங்காசனத்தின் மேல் வீற்றிருக்கும் பார்வோனுடைய தலைப்பிள்ளைமுதல் காவல் கிடங்கிலிருக்கும் சிறைப்பட்டவனின் தலைப்பிள்ளை வரைக்கும், எகிப்து தேசத்தில் இருந்த முதற்பேறனைத்தையும் மிருகஜீவன்களின் தலையீற்றனைத்தையும் கர்த்தர் அழித்தார்." (யாத்திராகமம் 12:29)

பார்வோன் விதிவிலக்கு இல்லாமல் எல்லா எபிரேய சிறுவர்களையும் கொல்ல உத்தரவிட்டான்(யாத். 1:22). தேவன் முதல் குழந்தைகளுக்கு மட்டுமே நிபந்தனைக்குட்பட்ட மரணத்தை தீர்மானித்தார் (யாத். 12:29). ஆட்டுக்குட்டியின் இரத்தம் அபிஷேகம் செய்யப்படாத ஒவ்வொரு வீட்லும் குறைந்தது ஒரு நபராவது இறந்தார் (யாத். 12:30).



பார்வோனின் பிரதிநிதியாக இருந்த எகிப்திய கடவுள்கள் மீது தேவனுடைய தீர்ப்புகள் முழு வீச்சில் இருந்தன (யாத். 12:12).

எந்த எகிப்திய கடவுளும் உதவி செய்ய தன் கையை உயர்த்தவில்லை, பேரழிவை தடுக்க பார்வோனும் எதுவும் செய்ய முடியவில்லை.



பார்வோனைப் போலவே, நம்முடைய பாவமும் மற்றவர்களை எதிர்மறையாக பாதிக்கலாம். ஆனால், மோசேயைப் போலவே, நம்முடைய உண்மைத்தன்மையும் உறுதியும் பலரைக் காப்பாற்றும்.

